பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 10 2024 6 30
சனிக்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள்-

1. நாடோடி பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு மத்திய அரசு 65 சதவீத தொகையை வழங்குகிறது என்று மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
3. வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனைத்துத்துறை அதிகாரிகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டுமென்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.
4. தமிழகத்தில் குழந்தைகள் மற்றும் பச்சிளங்குழந்தைகளுக்கான நான்கு நலத்திட்டங்களை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் இன்று தொடங்கி வைத்தார்.
5. ஆசிய இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

நாடோடி பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் **Washim**-மில் 23 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் மற்றும் கால்நடை வளர்ச்சிக்கான திட்டங்களை தொடங்கி வைத்து பேசிய பிரதமர்,

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டுமென்ற தொலைநோக்கு திட்டத்தி.ன் அடித்தளமாக விவசாயிகள் விளங்குவதாகத் தெரிவித்தார்.

மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் வளர்ச்சியை நோக்கியே இருப்பதாக அவர் கூறினார்.

**Panjara** பழங்குடியின மக்களின் வளமான கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வகையில் போகறா தேவியில் கட்டப்பட்டுள்ள அருங்காட்சியகத்தையும் பிரதமர் திறந்து வைத்தார்.

நான்கு அடுக்கு மாடிக் கட்டிடத்தில் 13 அரங்குகளைக் கொண்ட இந்த அருங்காட்சியகத்தில் பஞ்சரா பழங்குடியின சமூகத்தினரின் வாழ்க்கை முறையை சித்தரிக்கும் கலை அம்சங்களும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அரசின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 18-வது தவணை நிதியாக 20 ஆயிரம் கோடி ரூபாயை ஒன்பது கோடியே 40 லட்சம் விவசாயிகளுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி விடுவித்தார்.

இந்த நிதி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக மதுரையைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - விவசாயிகள் ) ---42 செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு மத்திய அரசு 65 சதவீத தொகையை வழங்குகிறது என்று மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சமீபத்தில் மத்திய அரசு அளித்துள்ள ஒப்புதலின் அடிப்படையில் சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது கட்டப்பணிகளுக்கு 33 ஆயிரத்து 593 கோடி ரூபாய் கடனாகவும், சமபங்கு

மற்றும் சார்நிலை கடனாக ஏழாயித்து 425 கோடி ரூபாயும் வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

எஞ்சிய 35 சதவீத மதிப்பீட்டுச் செலவுக்கான நிதி உதவியை மாநில அரசு வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு மற்றும் இருதரப்பு முகமைகளிடமிருந்து பெறப்படும் கடன்கள் மத்திய அரசின் பட்ஜெட்டிலிருந்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு நேரடியாக வழங்கப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்காக மத்திய அரசு அளித்த ஒப்புதலை அடுத்து, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகிய இருதரப்பு மற்றும் பன்னாட்டு முகமைகளுடன் மத்திய நிதி அமைச்சகம் பேச்சுவார்த்தை நடத்தி அது தொடர்பான ஆவண நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பான்னாட்டு முகமைகளிடமிருந்து பெறப்படும் கடன்தொகை மாநில அரசுக்கானதாக இல்லாமல், மத்திய அரசுக்கானதாகவே கருதப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் திட்ட ஒப்பந்தங்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களில் இந்த நடைமுறை பின்பற்றப்படும் என்றும், மாநில அரசின் ஒத்துழைப்போடு இது விரைந்து முடிக்கப்படும் என்றும் நிதி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனைத்துத்துறை அதிகாரிகளும் போர்க்கால அடிப்படையில் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டுமென்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், மழைநீர் வடிகால் பணி, மின்வாரிய கேபிள்களை அமைக்கும் பணி, குடிநீர் குழாய்களை அமைக்கும் பணி உள்ளிட்ட அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

மழைநீர் வடிகால்களை தூர்வாருவதோடு, நீர்வழி தடங்களில் உள்ள ஆகாயதாமரையை அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று அவர் கூறினார்.

தாழ்வான பகுதிகள் மற்றும் அதிக அளவு மழைநீர் தேங்கும் பகுதிகளிலிருந்து தண்ணீரை அகற்ற போதிய அளவில் மோட்டார் பம்ப்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்படும் மக்களுக்கு அருகிலேயே சமையல் கூடங்களை அமைத்து உணவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றம் அவர் தெரிவித்தார்.

சாலைகளில் உள்ள மரங்களை அப்புறப்படுத்தவும், பால் விநியோகம், குடிநீர் விநியோகம் சீராக நடைபெறும் வகையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் திரு உதயநிதி ஸ்டாலின் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் குழந்தைகள் மற்றும் பச்சிளங்குழந்தைகளுக்கான நான்கு நலத்திட்டங்களை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை அடையாறில் உள்ள சமூக நகர்புற நல மருத்துவமனையில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட இந்த திடடங்களை தொடங்கி வைத்தபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*( சவுண்ட்பைட் - மா சு ) -40---- செகண்ட்*

தமிழக அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான டி பி டி முத்தடுப்பு ஊசிகள் தேவையான அளவு கையிருப்பில் உள்ளதாக தெரிவித்த அவர், தேவை ஏற்படும்போது உடனடியாக மத்திய அரசிடம் தடுப்பூசிகள் கேட்டுக் பெறுவதாகக் கூறினார்.

மாநிலத்திற்குத் தேவையான 20 லட்சம் தடுப்பூசிகளில் தற்போது மத்திய அரசு இதுவரை ஒன்பது லட்சம் தடுப்பூசிகள் அளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பிரதமராக திரு நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு, சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

மூத்த பத்திரிகையாளர் வெங்கடேஷ், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் மூன்றாவது மற்றும் இறுதிப்பகுதி இன்றிரவு மணி 9.15-க்கு ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் உள் மாவட்டங்கள் மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியையொட்டிய சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்,

*( சவுண்ட்பைட் - செ க ) --- 35 செகண்ட்*

**[]<<<>>>[]**

தென்காசி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசு திட்டப்பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆட்சியர் திரு ஏ கே கமல் கிஷோர் அனைத்துத்துறை அலுவலர்களுடன் இன்று ஆய்வு நடத்தினார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்து ரூபாய் நாயணங்களை வாங்க மறுக்கும் நபர் அல்லது கடையின் உரிமையாளர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் எச்சரித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி ஆணைகளை ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் பணி ஆணைகளை வழங்கினார்.

**[]<<<>>>[]**

ஆசிய இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

சீன தைபேயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 18 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**

உலக ஜூனியர் டேக்வாண்டோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Saksham Yadav** வெண்கலப்பதக்கம் வென்றார்.

***End of News***